**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்- 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான

உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | குறிப்பிட்ட நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம், நிறுவனம் அது போன்ற பிற கொடுக்கல் வாங்கல்களைச் செய்தல் மற்றும் நிலைமையொன்றுக்காக ஒரே கொள்கையைப் பின்பற்ற வேண்டிய போதிலும், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் கொள்கை (சமமான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு விகிதம்) மற்றும் கிளிநொச்சி பயிற்சி நிலையத்தில் பின்பற்றப்படுகின்ற கொள்கைகள் ஒன்றுக்கொண்று வேறுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2021 இன் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது இரு நிறுவனங்களுக்கும் உரிய ஒரே பெறுமானத் தேய்வுக் கொள்கையொன்று பின்பற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொது துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 92 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாகத் தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா ரூபா 483,212,984 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் அச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் | குறிப்பிட்ட பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2021 இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கப்படும் போது இலங்கை பொதுத்துத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் கொண்டு செல்லும் பெறுமதி குறிப்பிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொது துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் பெறுமானத்தேய்விடல் தொடங்கப்படுவது அது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட பின்னரே என்ற போதிலும், கிளிநொச்சி பயிற்சி நிலையத்தினால் வருடத்தில் ரூபா 11,246,916 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிலையத்தின் சொத்துக்கள் பெறுமானத்தேய்விடல் கொள்வனவு செய்யப்பட்ட வருடத்திற்கு அடுத்த ஆண்டிலிருந்து செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் வருடத்தின் கணக்குகள் சமர்ப்பிக்கப்படும் போது இத் தவறு சரிப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொது துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### பெற வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் 2020 திசெம்பர் 31 இல் ரூபா 3,603,442 கடன்பட்டோர் மீதிகள் என்பதுடன் அதில் 10 வருடத்திற்கும் மேற்பட்ட பழைய கூட்டுத்தொகை ரூபா 1,111,415 மற்றும் 5 வருடங்களுக்கும் 10 இற்குமிடையிலான கடன்பட்டோர் மீதி ரூபா 2,109,449 என்பதுடன் அக்கடன் அறவிடப்படுவதற்கு அல்லது நிதிப்பிரமாணம் 113 இன் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டு புத்தகங்களில் பதிவளிக்கப்படுவதற்கு தேவையான ஏற்பாடுகள் எடுப்பதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய கடன்பட்டோரில் அதிகளவு இலங்கை போக்குவரத்துச் சபையின் பேரூந்துகளைத் திருத்துதல் தொடர்பான அறவிட வேண்டிய தொகை என்பதைக் குறிப்பிடுகிறேன். அதன் பிரகாரம் இரு தரப்பினரும் விரைவில் கலந்துரையாடி அந்நிலுவையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு அல்லது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தினால் கிளிநொச்சி பயிற்சி நிலையத்தின் நிதிக்கூற்றுக்கள் ஒன்றினைக்கப்பட்டு,, நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2021 ஒக்டோபர் 26 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2020.01.09 அமைச்சரவை முடிவின் பிரகாரம் கிளிநொச்சி இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் நிர்வாக நிதி அலுவல் மற்றும் ஏனைய வளங்கள் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டு சட்டத் திருத்தம் அல்லது புதிய சட்டத்தின் மூலம் நிறுவனங்கள் இரண்டும் ஒரே நிறுவனமாக நிறுவப்படவில்லை என்ற விடயத்தின் அடிப்படையில் உரிய நிறுவனம் இரண்டினதும் நிதிக்கூற்றுக்கள் வேறு வேறாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 1646 | அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த மாதத்திற்குப் பின்னர் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த மாதங்களின் தினசரி ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தில் காணப்பட்ட 25 வாகனங்களுக்காக இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பல வருடங்களாகப் பயன்பாட்டிலுள்ள நிறைவு செய்யப்பட்ட 100 பக்கங்களிலான மொத்த ஓட்டக் குறிப்புக்கள் புத்தகங்களின் பிரதிகளை அல்லது இறுதி ஓட்டக் குறிப்பு புத்தகங்களை வழங்க முடியும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018 யூலை 17 ஆந் திகதிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் இலக்கம் 38(1)(ஈ) பந்தி | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரத்திற்குள் தயாரிக்கப்படுவதை சான்றுபடுத்த வேண்டியுள்ளதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற | 2018 மற்றும் 2019 ஆம் வருடாந்த அறிக்கைகள் விரைவில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு | சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிறுவனத்திற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டியிருந்த போதிலும், 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களின் வருடாந்த அறிக்கைகள் இற்றை வரையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | வருகின்றன. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டி இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவு ரூபா 22,943,923 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 196,062 என்பதால் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவு 11602 சதவீதத்தினால் அதாவது ரூபா 22,747,861 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப் பின்னடைவிற்கு வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 103,461,759 ஆல் அதிகரித்தமை மற்றும் ஒப்பந்தங்களுக்கான சேவைச் செலவுகள் ரூபா 10,192,243 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வெற்றிடங்கள் காணப்படுகின்ற பிரதான பதவிகள் ஐந்திற்கான கல்வித் தகைமைகளுக்கு சமமான சம்பளப் படிகளை தயாரித்து அது தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடி அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் நிறுவனத்தின் ஊழியர் பதவிகளை மறுசீரமைப்பதால் சம்பள அதிகரிப்பு தொடர்பான சிக்கல்கள் குறித்து திறைசேரியுடன் கலந்துரையாடி திருத்தப்படுவதற்கு 2019 மே 23 இல் நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் தொடர்பான கணக்குகள் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருந்த அம் முடிவுகள் 2021 நவம்பர் 30 வரை செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்கான விசேட சம்பள முறைமையொன்று முன்மொழியப்பட்டு 2020.03.05 திகதியிடப்பட்ட வரிசை அமைச்சின் செயலாளரின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைவர் தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவிற்கு கடிதமொன்று அனுப்பட்டாலும் அதற்கு பதிலொன்று கிடைக்கவில்லை. வரிசை அமைச்சின் கீழ் வருகின்ற தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கு கல்வி ஊழியர்களின் தற்போதைய சம்பளப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அமைச்சின் அனுசரனையின் கீழ் நியமிக்கப்படடிருந்த குழு பங்கேற்று தற்போதுள்ள பிரச்சினைகள் குறித்து விளக்கப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பதவிகள் மறுசீரமைப்படும் போது ஏற்படுகிளன்ற சிக்கலான நிலைமைகள் திருத்தப்படல் வேண்டும். |